பார்க்க வேண்டியிருக்கிறது. செலவுகள் அனைத்தையும் இப்பொழுது அரசு பொறுப்பேற்றுக் கொள்வதா இல்லையா என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது.

கந்திலி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துமனை

*வினா எண் 1076 திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியம் விஷமங்கலம், கந்திலி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவமனையாக ஏற்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. தி. அன்பழகன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் போதிய அளவில் மருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த ஒன்றியங்களில் உள்ள மக்கள் தேவையான மருந்துகள் இல்லாத காரணத்தால் அல்லலுறுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அதை அரசு மருத்துவ மனையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய கேள்விக்கு நான் அளித்த விடையைத்தான் இந்த கேள்விக்கும் அளிக்க வேண்டியிருக்கிறது இதற்கு ஒரு கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்றுதான் ஏற்கனவே சொன்னேன் இந்த அரசாங்கம் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறது. The Commissioner and Secretary to Government Health and Family Welfare, Commissioner and Secretary to Goverment, R. D. L. A., Director of Medical Services, Director of Rural Development, Joint Secretary (Finance). உறுப்பினர்கள் The Deput Secretaryto Government (Health and Family Welfare கன்வீனராகக் கொண்ட குழுவை ஏற்படுத்தியிருக்றோம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதினால் இன்னும் விவரமாக பதில் கிடைக்கிறது இப்போது.

[முற்பகல் 9·40]

ஆகவே. இந்தக் குழுவை ஏற்படுத்தி கொள்கை ரீதியாக எப்படி அணுகலாம், எந்தெந்த முறையில் பஞ்சாயத்து யூனியன்கள் சார்பாக நடத்திவருகிற மருத்துமனைகளை அரசு ஏற்றுக்கொள்ளலாம் என்று அந்த குழு பரீசிலித்து பிறகு ஒரு முடிவு எடுத்துக்கொள்கிறோம்.